- அறிவித்தல் -

## தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## தென் மாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர் ( சிவில்) III ஆம் தரத்தில் / பயிற்சிப்பெற்ற தரத்தில் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை - 2025

01.0 தென் மாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர் ( சிவில்) III ஆம் தரத்தில் / பயிற்சிப்பெற்ற தரத்தில் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை, தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 2025 நவம்பர்/டிசெம்பர் மாதத்தில் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அதற்கான விண்ணப்பப்படிவத்தை தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.sp.gov.lk உத்தியோகபூரவ இணையதளத்தில் பிரசுரித்துள்ளதுடன், விண்ணப்பங்களை இணையவழி (online) மூலம் மட்டுமே சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி 2025 அக்டோபர் 24ஆம் திகதி ஆகும்.

குறிப்பு 01:- இணைய வழி மூலம் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் 2025 அக்டோபர் 03ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு திறக்கப்படுவதுடன் 2025 அக்டோபர் 24ஆம் திகதி பி.ப. 6.00 மணிக்கு முடிவடையும்.

இப் பரீட்சை காலி,மாத்தறை,தங்காலை என்ற நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மட்டுமே நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் அந்த நகரங்களுக்கமைய பரீட்சையில் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரமாக விண்ணப்பதாரியின் நிறந்தர வதிவிடமுள்ள மாவட்டத்தில் மேற் குறிப்பிட்ட நகரமொன்று மட்டுமே தேர்ந்தெடுத்தல் வேண்டும். இணையவழியில் விண்ணப்பத்தை பூர்த்தி செய்கையில் பரீட்சையில் தோற்றிட எதிர்பார்க்கின்ற நகரத்தை சரியாக குறிப்பிட வேண்டும். பரீட்சையில் தோற்றிட தேர்ந்தெடுக்கப்பட்ட நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. ஏதேனும் ஒரு நகரத்திற்காக போதுமான அளவு விண்ணப்பதாரர் எண்ணிக்கை இல்லாத போது பரீட்சையை நடாத்தப்படும் நகரங்கள் அல்லது நகரத்தை தொடர்பாக ஆணைக்குழுவினால் முடிவு செய்யப்படும்.

2.0 தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்து மூல சோதனையின் பெறுபேறுகளுக்கமைய திறன்களின் மீது தகைமைகளை பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள், மாவட்ட சனத்தொகை விகிதத்தின் அடிப்படையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ( சிவில்) III ஆம் தரத்தில் / பயிற்சிப்பெற்ற தரத்தில் பதவிகளுக்காக நியமனம் செய்ய தேர்ந்தெடுக்கப்படுவர்

3.0 (அ) பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 31ஆகும்.

(ஆ) நியமனம் செய்யும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் நாளை நியமன அதிகாரியினால் உறுதிபடுத்தப்படும். வெற்றிடங்களில் ஏதேனும் எண்ணிக்கை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் பூர்த்தி செய்யாதிருப்பதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு

(இ) அரச சேவையின் நியமனங்களை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இலக்கம் 222 மற்றும் 2017.05.24 திகதியிட்ட தென் மாகாண கௌரவ ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்ட தென் மாகாண அரசாங்க சேவையில் தொழில்நுட்பச் சேவை தொடர்பான பிரமானக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அந்த விதிமுறைக்கு செய்யப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் செய்யப்படும் திருத்தங்களுக்கும் தாபன விதிக்கொவையில் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள்/தென் மாகாண நிதி விதிகளின் ஏற்பாடுகளுக்கும் இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 திகதியைக் கொண்ட அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கும் உட்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ( சிவில்) III ஆம் தரத்தில் / பயிற்சிப்பெற்ற தரத்தில் பதவிக்கு நியமனம் செய்யப்படுவர்.

(ஈ) நியமனத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் முதல் நியமனம் பெற்ற சேவை நிலையத்தில் குறைந்த பட்சம் மூன்று (03) வருடங்கள் கட்டாயமாக கடமையாற்ற வேண்டும். எவ்வாறெனினும் நியமன அதிகாரியினால் முடிவு செய்யப்படும் ஏதேனும் விசேட காரணங்கள் மீது அக் காலம் முடிவடைவதற்கு முன் ஒரு உத்தியோகத்தரை இட மாற்றம் செய்வதற்கு தேவைப்படுமாயின், நியமன அதிகாரியிடம் அதற்கான அதிகாரம் உண்டு.

(உ) இந் நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். தொழில்நுட்ப உத்தியோகத்தர் ( சிவில்) III ஆம் தரத்தில் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்து மூன்று (03) வருடங்களுக்குள் சேவைப் பிரமாணத்தில் குறிப்பிட்டவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைத் தாண்டற் பரீட்சையை சித்தியடைதல் வேண்டும்.

(ஊ) நியமனத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் நீங்கள் நியமனத்திற்கான தகைமைகளை பூர்த்தி செய்த மொழி மூலத்திற்கமைய 2020.10.16 ஆம் திகதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளில் குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கமைய தங்களால் ஏற்புடையவாறு அரச கரும மொழி தெர்ச்சியை பூர்த்தி செய்தல் வேண்டும்.மேலும் மொழித் தேர்ச்சி தொடர்பாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடபடிமுறைகளின் ஏற்பாடுகளும் ஏற்புடையதாகும்.

## 4.0 சம்பளம் :-

(அ) III ஆம் தரத்தில் பதவிற்குரிய சம்பளம்

2025.03.25 திகதியிட்ட இலக்கம் 10/2025 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையில் MN-03 சம்பளப் பிரிவு இப் பதவிக்கு உரித்தாவதுடன் அதற்கு ஏற்புடைய மாதாந்த சம்பள அளவு 52,250 - 10 x 800 - 11 x 1,190 - 10 x 1,320 - 10 x 1,350 - 100,040/- ரூபா ஆவதுடன் அச் சமபளம் தங்களுக்க உரித்தாவது 2027.01.01ஆம் திகதியிலிருந்தாகும். நியமனம் நடைமுறையாகும் திகதியிலிருந்து தங்களுக்கு அச் சுற்றறிக்கையில் IIIஆம் அட்டவணையில் ஏற்பாடுகளின் படி சம்பளம் வழங்கப்படும்.

(ஆ) மேல் சுறற்றிக்கைக்கு அமைய தென் மாகாண தொழில்நுட்ப சேவையில் பயிற்சி செய்யும் தரத்திற்குரியதான மாதாந்த கொடுப்பனவுகள் பின்வருமாறே.

| ஆண்டு | மாதாந்த கொடுப்பணவு | | |
|---|---|---|---|
| | 2025.04.01 ஆம் திகதியிலிருந்து (ரூ.) | 2026.01.01 ஆம் திகதியிலிருந்து (ரூ.) | 2027.01.01 ஆம் திகதியிலிருந்து (ரூ.) |
| 1 ஆம் ஆண்டு | 41,317.00 | 43,274.00 | 45,230.00 |
| 2 ஆம் ஆண்டு | 41,689.00 | 43,730.00 | 45,770.00 |

**5.0** தென் மாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர் ( சிவில்) III ஆம் தரத்தில் பதவி நிறந்தரமானது. ஓய்வூதியம் உரித்துடையதாகும். இப் பரீட்சையால் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ( சிவில்) III ஆம் தரத்தில் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்களுக்கு உரித்தான ஓய்வூதிய முறைமை தொடர்பாக அரசாங்கத்தால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு உத்தியோகத்தர் கட்டுப்படுதல் வேண்டும்.

**குறிப்பு 02 :-** பயிற்சி செய்யும் தரத்திற்கு சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரர்கள் ஏற்புடைய ஆட்சேர்ப்பு முறைகளில் குறிப்பிட்டவாறு பயிற்சி காலக்கட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்ததன் பின்னர் தென் மாகாண அரசாங்க ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் பரீட்சையை சித்தியடைந்தமைக்கு வெளியிடப்படும் சான்றிதழை முன்வைப்பதன் பின்னர் சேவையில் தரம் IIIற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையை சித்தியடைய தவறும் பயிலுநர்கள் இருப்பதாயின் அவர்களுக்கு 06 மாதங்களை விட அதிகமாகாத காலத்திற்காக தங்களுடைய பயிற்சி காலத்தை நீடித்துக்கொள்ளும் சந்தர்ப்பம் உண்டு. அவ்வாறு நீடித்துக்கொள்ளப்படும் கால எல்லையின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படம் பரீட்சையை தோல்வியடையும் திறந்தவெளியின் கீழ் விண்ணப்பித்த பயிலுநர்களின் சேவையை முடிவடைக்கப்படும்.

**6.0 தகைமைகள்** :- தொழில்நுட்ப உத்தியோகத்தர் ( சிவில்) III ஆம் தரத்தில் / பயிற்சிப்பெற்ற தரத்தில் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக பின்வரும் தகைமைகள், விண்ணப்பங்களைக் கோரும் இறுதி திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**6.1 III ஆம் தரம்**

**(அ).** கல்வித் தகைமைகள்

துறைக்கு ஏற்புடைய இரண்டு பாடங்களுடன் விஞ்ஞானம் /கணிதம் /தொழில்நுட்பவியல் பாடத் தொகுப்பைச் சேர்ந்த மூன்று பாடங்களில் க.பொ.த.(உ/த)ப் பரீட்சையை ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

| பதவி | பிரிவு | பாடங்கள் | | | |
|---|---|---|---|---|---|
| தென் மாகாண தொழில்நுட்ப சேவையில் சிவில் | கணிதப் பிரிவு | பௌதிகவியல் | இரசாயனவியல் | கூட்டிய கணிதம் | |
| | விஞ்ஞானப் பிரிவு | | | உயிரியல் | |
| | பொறியியல் தொழில்நுட்பவியல் | பொறியியல் தொழில்நுட்பவியல | தொழில்நுட்பத்திற்காக விஞ்ஞானம் | பொருளியல் | இவற்றில் ஒரு பாடத்தை கற்று இருத்தல் வேண்டும். |
| | | | | புவியியல் | |
| | | | | வீட்டுவினை பொருளியல் | |
| | | | | ஆங்கில மொழி | |
| | | | | தொடர்பியல் மற்றும் ஊடகக் கல்வி | |
| | | | | தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம் | |
| | | | | ஓவியம் | |
| | | | | வணிகக் கல்வி | |
| | | | | விவசாயவியல் | |
| | | | | கணக்கியல் | |

மற்றும்

- சிங்கள /தமிழ் /ஆங்கில மொழி, விஞ்ஞானம்,கணிதம் மற்றும் இன்னும் ஒரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் (06) கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**(ஆ).** தொழில் தகைமைகள் :-

i. மொரட்டு பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்லோமா

அல்லது

ii. தேசிய பயிலுநர் மற்றும் தொழில் பயிற்சி அதிகார சபையால் வழங்கப்படும் பொறியியல் தேசிய டிப்லோமா

அல்லது

iii. கல்வி மற்றும் உயர்க்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்லோமா

அல்லது

iv. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்லோமா

அல்லது

v. இலங்கை பொறியியல் நிறுவனத்தால் நடத்தப்படும் பொறியியல் பரீட்சையில் 1ஆம் பிரிவை வெற்றிகரமாக பூர்த்திசெய்திருத்தல்.

அல்லது

vi. தோழில் துறைக்குரியதாக தேசிய தொழில் திறன் (NVQ) 6 ஆம் மட்டத்து தகைமைகள்

அல்லது

vii. இலங்கை தொழில்நுட்ப சேவைகள் சபை அல்லது தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட கூடிய மேற் குறித்த தொழில்நுட்ப தகைமைகளுக்கு சமமான அல்லது உயர் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**6.2 பயிற்சிப் பெற்ற தரம் (ஒரு வருட பயிற்சி காலம்)**

**(அ) கல்வித் தகைமைகள் :-**

துறைக்கு ஏற்புடைய இரண்டு பாடங்களுடன் விஞ்ஞானம் (விவசாயவியல் , உயிரியல மற்றும் விவசாய தொழில்நுட்பவியல்) கணித தொழில்நுட்பவியல் பாடத் தொகுப்பைச் சேர்ந்த மூன்று பாடங்களில் க.பொ.த.(உ/த)ப் பரீட்சையை ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் அல்லது துறைக்குரிய பாடங்களுடன் தேசிய தொழில் தகைமைகள் (NVQ) 4 பெற்றிருத்தல்

மற்றும்

சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம் கணிதம் மற்றும் ஏனைய் ஒரு பாடத்திற்கு திறமை சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் (06) க.பொ.த. (சாதாரணத்தரப்) பாரீட்சையை சித்தியடைந்திருத்தல் அல்லது தேசிய தொழில் தகைமைகள் ( NVQ) 3 பெற்றிருத்தல்.

மற்றும்

(ஆ). தொழில் தகைமைகள் :-

மூனறாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக் குழு ஏற்றுக்கொண்ட தொழில்சார் கல்லூரிப் பதவிக்குரிய துறையொன்றில் பாடநெறியொன்றை வெற்றிகரமாகக் கற்று தேசிய தொழில் தகைமைகள் (NVQ) 5 மட்டத்திற்குரிய தகைமையொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

**6.3 பயிற்சி பெற்றத் தரம் ( இரண்டு வருட பயிற்சி காலம்)**

**(அ). கல்வித் தகைமைகள் :-**

சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம் கணிதம் மற்றும் ஏனைய் ஒரு பாடத்திற்கு திறமை சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் (06) க.பொ.த. (சாதாரணத்தரப் பாரீட்சை)யை சித்தியடைந்திருத்தல். அல்லது தேசிய தொழில் தகைமைகள் ( NVQ) 3 பெற்றிருத்தல

மற்றும்

**(ஆ). தொழில் தகைமைகள் :-**

மூனறாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக் குழு ஏற்றுக்கொண்ட தொழில்சார் கல்லூரிப் பதவிக்குரிய துறையொன்றில் பாடநெறியொன்றை வெற்றிகரமாகக் கற்று தேசிய தொழில் தகைமைகள் (NVQ) 4 மட்டத்திற்குரிய தகைமையொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

குறிப்பு 03 :-

i. தரம் III ற்கு நேரடியாக ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் பயிற்சி பெற்ற தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல் என்ற இரண்டு முறைகளிலும் ஆட்சேர்ப்பு செய்யும் போது ஆட்சேர்ப்பு செய்யும் தரமான III ஆம் தரத்திற்கு முதலில் ஆட்சேர்ப்பு செய்தல் வேண்டும்.

ii. III ஆம் தரத்திற்கு தகைமைப் பெறும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை வெறிறிட எண்ணிக்கைக்கு போதுமானதாகாத போது , எஞ்சிய வெற்றிடங்களுக்காக பயிற்சி பெற்ற தரத்திற்குரிய தகைமைகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் பயிற்சி செய்யும் தரத்திற்கு சேர்த்துக்கொள்ளப்படுவர். (முதலில் ஓராண்டு பயிற்சி தரத்திற்கும் ஓராண்டு பயிற்சி தரத்திற்கு போதுமானதாகாத போது ஈராண்டு பயிற்சி தரத்திற்கும் ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படும்

**6.4 அனுபவம்** :- ஏற்புடையதில்லை

**6.5 வயது** :- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அதாவது 2025.10.24ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாதவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய 2007.10.24ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன் மற்றும் 1995.10.03ஆம் திகதிக்கு அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியை அமைந்தவர்களுக்கு மட்டும் இதற்காக விண்ணப்பிக்கும் தகைமைகள் உண்டு)

**6.6 உடல் ரீதியான தகைமைகள்** :-

தென் மாகாணத்துக்குள் எந்தவொரு பிரதேசத்திலும் பணி புரிவதற்கும் பதவியின் பணிக்கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை கொண்டுள்ளவராக இருத்தல் வேண்டும்.

**6.7 ஏனைய** :-

i. விண்ணப்பதாரர் இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
ii. விண்ணப்பதாரர் சிறந்த நன்நடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
iii. பரீட்சைக்கான தகைமைகளை பூர்த்தி செய்ய வேண்டிய இறுதி திகதிக்கு முந்திய ஐந்து (05) வருடங்களுக்குள் அவர் விண்ணப்பிக்கும் மாவட்டத்திற்குள் குறைந்தது மூன்று (03) வருடங்கள் தொடர்ச்சியாக நிறந்தர வதிவைக்கொண்டவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

திருமணத்தின் காரணத்தால் தென் மாகாணத்திற்கு வதிவிடம் மாறியுள்ள விண்ணப்பதாரி ஒருவரென்றால் பரீட்சைக்கான தகைமைகளை பூர்த்தி செய்ய வேண்டிய இறுதி திகதிற்கு முன்னர், தென் மாகாணத்தில் வாழ்க்கைத் துணையாளரின் வதிவு திருமண நாளிலிருந்து கடந்த 3 பஞ்சாங்க வருடங்கள் இருத்தல் வேண்டும்.

iv. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும் என்று அழைப்பு அறிவித்தலில் குறிப்பிடப்படும் திகதிக்கு, எல்லா விதத்திலும் அந்த தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

v. எந்தவொரு சமயப்பிரிவிலும் துறவி நிலைக் கொண்டவருக்கு இப் பரீட்சையில் தோற்றும் தகைமைக் கிடையாது

**7.0 மாவட்ட சனத்தொகை விகிதத்தின் அடிப்படையின் மீது தேர்ந்தெடுத்தல் :**

(அ) விண்ணப்பதாரர்களால் தாங்கள் வெற்றிடங்களுக்காக போட்டியிட தேர்ந்தெடுக்கப்படும் மாவட்டத்தை இணையவழி மூல விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது சரியாக குறிப்பிடல் வேண்டும்.

(ஆ) சேவையில் ஆட்சேர்ப்பு செய்தல் பிரதிநிதித்துவ ரீதியின் அடிப்படையில் செய்யப்படும். ஒவ்வொரு நிர்வாக மாவட்ட மக்கள் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாக, அந்த ஒவ்வொரு மாவட்டத்திற்காக, குறிப்பிட்ட வெற்றிட எண்ணிக்கையின் அளவை ஒதுக்கப்படும். ஏதேனும் ஒரு மாவட்டத்தில் நிரப்ப வேண்டிய வெற்றிடங்களுக்காக, அம் மாவட்டத்தில் இருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மட்டுமே போட்டியிட தகுந்தவர்களாவர்.

I. ஏதேனும் ஒரு மாவட்டத்திற்கு மேல் குறிப்பிட்டவாறு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை அந்த மாவட்டத்திற்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களால் நிரப்ப முடியாத பட்சத்தில் அவ் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அருகிய மாவட்டங்களுக்கிடையில் அந்த மாவட்டங்களின் மக்கள் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாக மீண்டும் பிரிக்கப்படும்.

II. பரீட்சையில், தேவையான குறைந்த பட்ச புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை ஒதுக்கியுள்ள வெற்றிட எண்ணிக்கையை விட குறையும் போது மாவட்ட சனத் தொகையின் அடிப்படையில் தேர்ந்தெடுத்தல் செய்யப்படமாட்டாது.

**கருத்திற் கொள்ளல் வேண்டும்.** – மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்கள் என்று பொருள்படுத்தப்படுவது அந்த மாவட்ட சனத் தொகைக்கு விகிதமாக அம் மாவட்டத்தில் இருந்து போட்டிப் பரீட்சையில் தோற்றப்படும் விண்ணப்பதாரர்களுக்காக ஒதுக்கப்படும் வெற்றிட அளவாவதுடன் அந்த நிர்வாக மாவட்டத்துக்குள் இருக்கின்ற அரச நிறுவனங்களிலுள்ள சேவையில் வெற்றிட எண்ணிக்கையல்ல என்பதை கருத்திற்கொள்ள வேண்டும்.

குறிப்பு 04 :- எந்தவொரு பரீட்சார்த்திக்கும் ஒரு மாவட்டத்தை விட கூடுதலான வெற்றிடங்களுக்காக போட்டியிட அனுமதிக்கப்பட மாட்டாது. இணையவழி விண்ணப்பங்களை சமர்ப்பிக்கையில் மேல் 7இல் குறிப்பிட்ட தகைமைகளுக்கமைய தாங்கள் வெற்றிடத்திற்காக போட்டியிட மாவட்டத்தை தேர்ந்தெடுத்த பின்னர் அதை மீண்டும் மாற்ற முடியாது.

**8.0 பரீட்சைத் திட்டம்** :- இப் பரீட்சை சிங்களம்,தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் தங்களுக்கு ஏற்புடைய ஒரு மொழி மூலத்தை தேர்ந்தெடுக்க வேண்டியதுடன் பரீட்சையில் தோற்றும் அனைத்து வினாத்தாள்களுக்காகவும் அந்த மொழி மூலத்திலேயே விடையளித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது.

| பாடம் | காலம் | மொத்த புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|
| உளச்சார்ப்பு (Intelligence quotient Test) | 01 மணிதியாலம் | 100 | 40% |
| அகநிலை தொழில்நுட்பப் பரீட்சை (Subjective Technical Test) | 02 மணிதியாலங்கள் | 100 | 40% |

**8.1 பரீட்சைக்கான பாடத் திட்டம் பின்வருமாறே.**

**8.1 (அ) பொது உளச்சார்பு**

விணணப்பதாரியின் சிந்திக்கும் தர்க்கத் திறன் , மாற்றுப்பதிவு,அர்த்த விளக்கம்,தொடர்புகளைக் காணுதல்,மொழி பெயர்ப்பு,பிரச்சினைகளை தீர்க்கும் திறன்,காரண விளைவு தொடர்புகளை புரிந்துக்கொள்ளல், எதிர்வு கூறல்,தகவல் அமைப்பு,மாதிரியை அடையாளம்

காணுதல்,அறிவுறுத்தல்களை பின்பற்றுதல் ஆகிய திறமைகளை அளவிடுவதற்காக தயாரிக்கப்படும் பல்தேர்வு வினாக்களால் கொண்டுள்ளதே உளச்சார்வு வினாப்பத்திரம்.

8.1(ஆ) அகநிலை தொழில்நுட்பப் பரீட்சை

**1.0 கட்டுமானத் திட்டங்களை வரைதல்**

1.1 கட்டுமான திட்டமொன்றில் பயன்படுத்தப்படும் வழக்கக் குறியீடுகள்

1.2 திட்டமொன்றில் பயன்படுத்தப்படும் அளவுகள்

1.3 திட்டப்பத்திரங்களை வரையும் போது பயன்படுத்தப்படும் வெளிபாட்டு வகைகள்

1.4 கட்டட அத்திவாரங்கள் உட்பட ஏனைய பகுதிகளின் வடிவமைக்கப்பட்ட வரைதல்

1.5 கான்கிரீட் அடித்தளங்கள், இரும்புச் சுவர்கள் மற்றும் கான்கிரீட் தூண்களின் கட்டமைப்பு வரைதல்

**2.0 கட்டுமானப் பொருட்கள்**

2.1 கட்டிடங்களை கட்டுமானம் செய்வதற்காக பயன்படுத்தப்படும் பொருட்கள் தொடர்பான விபரங்கள்

2.2 அந்த கட்டிடங்களை கட்டுமானம் செய்வதற்காக பயன்படுத்தப்படும் பொருட்களை பயன்படுத்தும் விதம், உற்பத்தி மற்றும் தரத்திற்கான பரிதேசதனைகள் தொடர்பான அறிவு

2.3 வீதி கட்டுமானத்திற்காக பயன்படுத்தப்படும் பொருட்களை பயன்படுத்தும் விதம், உற்பத்தி மற்றும் தரத்திற்கான பரிசோதனைகள் தொடர்பான அறிவு

**3.0 அளவீடு மற்றும் மட்டமெடுத்தல் மற்றும் நிலைப் பக்கங்களை தயாரித்தல்**

3.1 நில அளவீட்டுக்காக பயன்படுத்தபா்படும் முறைமைகள் மற்றும் உபகரணங்கள்

3.2 சங்கிலி அளவீடு மற்றும் தியோடைலைட் போகு

**4.0 கட்டிடங்களை கட்டுமானம் செய்தல் மற்றும் பேணல்**

4.1 அத்திவாரங்கள், செங்கல் வேலைகள்,கான்கிரீட் வேலைகள், மரக் கூரை நிர்மானித்தல்,இரும்பு மதில்கள் மற்றும் படிக்கட்டுகளை நிர்மானித்தல்.

4.2 கட்டடங்களை பேணுதல்,சுவர்களில் நிறப்பூசுதல் மற்றும் இரும்பு மேற்பரப்பில் நிறப்பூசுதல்

4.3 கட்டுமான அலுவல்களின் போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு முறைகள்

**5.0 வீதி நிர்மானித்தல் மற்றும் பேணல்**

5.1 வீதி நிர்மானிப்புக்காக பயன்படுத்தப்படும் பொருட்கள்

5.2 வீதி நிர்மானிக்கும் போது பயன்படுத்தப்படும் பரிசோதனைகள்

5.3 வீதி நிர்மானிப்பு தொடர்பான அடிப்படை அறிவு

5.4 வீதிகளை பேணுதல் தொடர்பான அறிவு

**6.0 அளவு தொடர்பான அறிவு**

6.1 கட்டிடமொன்றின் அளவுப் பத்திரங்களை தயாரித்தல், மதிப்பிடுதல்

6.2 விவசாய வழிகள்,பாசன அமைப்பொன்றின் அளவுப் பத்திரங்களை தயாரித்தல

**7.0 பணிகள்**

7.1 நீர்க் கழிவு மற்றும் சுத்தம் செய்தல்

7.2 மின்சாரம் வழங்குதல் தொடர்பான அடிப்படை அறிவு

7.3 கழிவுகளை அகற்றல் மற்றும் அழுகச் செய்தல்

**8.0 கட்டுமானங்களை மதிப்பீடு செய்தல்**

8.1 நியம அளவு முறைகள் தொடர்பான அறிவு

8.2 விலை நிர்ணயம் (Rate) தொடர்பான அறிவு

**9.0 பரீட்சைப் பெறுபேறுகள்** : தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளமான www.psc.sp.gov.lk மூலம் ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் தனிப்பட்டரீதியில் பார்த்துக்கொள்ள முடிகின்றவாறு பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடப்படுவதுடன், பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின் மாவட்ட திறன்களின் ஒழுங்குமுறைக்கமைய தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியலொன்றை நியமன அதிகாரியிடம் வெளியிடப்படும்.

**10.0 பரீட்சைக் கட்டணங்கள்** : பரீட்சைக் கட்டணம் 1000.00 ரூபாவாகும். இணையவழியாக (online) பரீட்சைக் கட்டணத்தை செலுத்த வேண்டும். அனைத்து கட்டணங்களையும் VIZA அல்லது MASTER அட்டைகள் மூலம் மட்டும் செலுத்த வேண்டியதுடன் அதை தவிர்ந்து ஏனைய முறைகள் மூலம் செய்யப்படும் கட்டணங்களை எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சை கட்டணத்திற்கான மொத்த பணத்தையும் செலுத்த வேண்டியதுடன் பரீட்சைக் கட்டணத்தை குறைவாக செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேல் குறிப்பிட்ட கட்டண முறைகளின் மூலம் பரீட்சைக் கட்டணங்களை செலுத்தும் போது ஏற்படும் குறைப்பாடுகள் தொடர்பாக தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு பொறுப்பு கூற மாட்டாது.

எக் காரணத்திற்கொண்டும் பரீட்சைக் கட்டணத்தை மீள செலுத்தப்படமாட்டாது என்பதையும் அக் கட்டணங்கள் வேறு எந்தவொரு பரீட்சைக்காகவோ மாற்றீடு செய்ய இடம் தர மாட்டாது என்பதையும் கருத்திற்கொள்ளல் வெண்டும்.

**குறிப்பு** 5 - விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் இறுதி திகதியை வரை தாமதம் செய்வதால் ஏற்படும் பாதகமான நிலைகளை விண்ணப்பதாரர்களால் பொறுப்பேற்றுக்கொள்ளல் வேண்டும்.

**11.0 விண்ணப்பிக்க வேண்டிய ஒழுங்குமுறை** :-
அனைத்து விண்ணப்பதாரர்களும் www.psc.sp.gov.lk என்ற தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இணையதளத்திற்குள் உற்பிரவேசித்து பரீட்சையை சரியாக தேர்ந்து, ஏற்புடைய தகவல்களை உள்ளடக்கி பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய பின்னர் விண்ணப்பப்படிவத்தை தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல் (submit) வேண்டும். இப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் கால எல்லை 2025 **அக்டோபர் 24ஆம் திகதி பி.ப. 6.00** மணியில் முடிவடையும். ( இதற்காக இணையதள வசதிகளுடனான desktop அல்லது laptop கணனிகளை பாவித்தல் மிகவும் பொருத்தமாகும்.)

11.1 விண்ணப்பதாரர்கள் தாங்களாகவே இப் பரீட்சைக்கான தங்களது விண்ணப்பப்படிவத்தை இணையவழி மூலம் பூர்த்தி செய்தல் வேண்டும்.

11.2 விண்ணப்பதாரர்களால் உள்ளடகும் எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றம் செய்ய இடம் தர மாட்டாது. ஆகையால் தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு (submit) முன் குறித்த தகவல்களை நன்கு பரிசோதிப்பது மிகவும் முக்கியமாகும்.

11.3 வேறு முறைகளில் சமர்ப்பிக்கின்ற அனைத்து விண்ணப்பப்படிவங்களையும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். இணையவழி மூலம் இப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கையில் தவறான பரீட்சையை தேர்ந்தெடுப்பது போன்ற தவறுகைகளால் ஏற்படும் இழப்பினை தாங்களாகவே பொறுப்பேற்றுக்கொள்ளல் வேணடும்.

11.4 தேன் மாகாண அரசாங்க சேவைசகள் ஆணைக்குழுவிடம் இணையவழியாக சமர்ப்பிக்கப்பட்ட (Submit) விண்ணப்பப்படிவத்தை பதிவிறக்கம் (Download) செய்து அதன் வன் பிரதியை(Hard Copy) 2025 அக்டோபர் மாதம் 24ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்ப வேண்டியதுடன் , அதனுடன் எவ்வித பின்னிணைப்பும் அனுப்பக் கூடாது. அந்த வன் பிரதியை புகுத்தனுப்பும் உறையின் இடது பக்க மேல் முனையில் **“தென் மாகாண தொழில்டநுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம்**

IIIஇல் /பயிற்சி பெற்றத் தரத்தில் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை – 2025" என்று குறிப்பிடுதல் கட்டாயமாகும்

செயலாளர்,
தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு
6ஆம் மாடி, மாவட்ட செயலகத் தொகுதி
காலி

11.5 **விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுபடுத்தல்:**

தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் சமர்டப்பிக்கப்படும் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் வன் பிரதியில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுபடுத்திருத்தல் வேண்டும். ஏதேனும் ஒரு அரச நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் ஒருவர் தங்களது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அங்கீகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் மூலமும் அவ்வாராகாத விண்ணப்பதாரர் ஒருவர் தங்களது கையொப்பத்தை அரசாங்க பாடசாலை தலைவர்/ ஓய்வுப்பெற்ற உத்தியோகத்தர் / பிரிவின் கிராம உத்தியோகத்தர் /சமாதான நீதவான் /சத்திய பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி/ பிரசித்தி பெற்ற நொத்தாரிசு/ முப்படை அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் / அரச அல்லது மாகாண அரச சேவையில் நிறந்தர பதவி நிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விஹாரையில் விஹாராதிபதி அல்லது தலைமை பிக்கு அவர்கள் அல்லது பிற மதத்தின் வணக்கஸ்தளத்தை பொறுப்பான அல்லது மதகுருமார்களில் குறிப்பிடத்தக்க பதவியைக்கொண்ட ஒருவரினால் சான்றுபடுத்திக்கொள்ளல் வேண்டும்.

12.0 **அனுமதி அட்டை :**

இணையவழி மூலம் விண்ணப்பங்களை கோருகின்ற படியால், தகைமைகளை பரிசோதித்தலின்றி, அறிவித்தலில் குறிப்பிட்ட தகைமைகள் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்று ஊகித்து உரியவாறு பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி குறிப்பிட்ட திகதியில் அல்லது அதற்கு முன் எல்லா விதத்திலும் பூர்த்தியான விண்ணப்பப்படிவங்களை இணையவழி மூலம் சமர்ப்பித்துள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் இத் திறந்த போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்க்கு தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால், உத்தியோகபூர்வ இணையதளமான www.psc.sp.gov.lk ஊடாக இணையவழியில் அனுமதிப்பத்திரங்களை வெளியிடப்படும். அனுமதிப்பத்திரங்களை வெளியிட்ட உடனே அதனை தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் உத்தியோகபூர்வ இணையதளத்தில் அறிவித்தலின் மூலம் பிரசித்திபடுத்தப்படும். அதற்கமைய இணையதளத்திலுள்ள பரீட்சை அனுமதி பத்திரங்களை வெளியிடும் சாரளத்தை அணுகி தமது தேசிய அடையாளட்டை இலக்கத்தை உள்ளிடுவதனால் பரீட்சை அனுமதிப் பத்திரத்தை பதிவிறக்கம் செய்துக்கொள்ள முடியும்.

அனுமதி அட்டையை பரிசோதித்துப் பார்த்து திருத்தங்கள் இருப்பின் ஏற்புடைய நிரலில் திருத்தப்பட வேண்டிய விதத்தை குறிப்பிட்டு விண்ணப்பதாரரின் கையொப்பத்தையிட வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது திருத்தங்களுக்காக செய்யப்படும் கோரிக்கைகளை கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

பரிட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டையை வெளியிடுதல், அவர் பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமைகளை பூர்த்திசெய்துள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டதாக கருதுதல் ஆகாது. பதிவிறக்கம் செய்யப்பட்ட பரீட்சை அனுமதிப் பத்திரத்தை ஏ4 அளவிலான தாளின் இரு புறங்களையும் பாவித்தவாறு அச்சிட்டு கையொப்பத்தை சான்றுபடுத்தி மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். ஏதேனும் ஒரு அரச நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் ஒருவர் தங்களது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அங்கீகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் மூலமும் அவ்வாராகாத விண்ணப்பதாரர் ஒருவர் தங்களது கையொப்பத்தை அரசாங்க பாடசாலை தலைவர்/ ஓய்வுப்பெற்ற உத்தியோகத்தர் / பிரிவின் கிராம உத்தியோகத்தர் /சமாதான

நீதவான் /சத்திய பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி/ பிரசித்தி பெற்ற நொத்தாரிசு/ முப்படை அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் / அரச அல்லது மாகாண அரச சேவையில் நிறந்தர பதவி நிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விஹாரையில் விஹாராதிபதி அல்லது தலைமை பிக்கு அவர்கள் அல்லது பிற மதத்தின் வணக்கஸ்தளத்தை பொறுப்பான அல்லது மதகுருமார்களில் குறிப்பிடத்தக்க பதவியைக்கொண்ட ஒருவரினால் சான்றுபடுத்திக்கொள்ளல் வேண்டும்.

13.0 **பரீட்சையில் அனுமதித்தல்** :

(அ) பரீட்சையில் தோற்றும் விண்ணப்பதாரிகளால் தங்களது கையொப்பத்தை சான்றுபடுத்திக்கொண்ட அனுமதி அட்டையை முதன் முதலில் அந்த மண்டபத்தில் தோற்றும் பரீட்சை நாளில் அங்கு பரீட்சை நிலைய பொறுப்பான மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறான அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திக்கு பரீட்சையில் தோற்றும் அனுமதி கிடைக்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தி தங்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

14.0 **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்** :-

அனுமதி அட்டையில்லா எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் பரீட்சையில் தோற்றும் வாய்ப்பு கிடைக்கப்படாது. மேலும் , விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்துக்கள் தோற்றப்படும் அனைத்து வினாத்தாள்களுக்காகவும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) தேசிய அடையாளட்டை
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

பரீட்சை பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதிப்படுத்த கூடியவாறு முகத்தை மற்றும் மின்னணு தொடர்பு சாதனங்களை அணியாதமை உறுதிபடுத்துவதற்காக இரண்டு காதுகளை மறைக்காமல் பரீட்சை மண்டபத்துக்குள் உற்பிரவேசித்தல் வெண்டும். அவ்வாறு தங்களது அடையாளத்தை உறுதிபடுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்துக்குள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் முகம் மற்றும் இரண்டு காதுகளை மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

15.0 **தேர்ந்தெடுக்கும் முறைமை** : - இப் பதவிகளுக்காக பரீட்சையில் காட்டிய திறன்கள் மற்றும் மாவட்ட சனத்தொகையின் விகிதத்திற்கமைய தகைமைகளை பரிசோதிப்பதற்கான நேர்முகப் பரீட்சையின் (புள்ளிகள் வழங்கப்படமாட்டாது) பின்னர் தகைமையுள்ளோர் தேர்ந்தெடுக்கப்படுவர். (நியமனங்கள் வழங்கும் போது இருக்கும் வெற்றிடங்களுக்கமைய நியமனங்களை வழங்கவேண்டிய இறுதி முன்னணி மட்டத்தில் சமமான புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் சிலபேர் இருக்கின்ற சந்தர்ப்பத்தில் நேர்முகப் பரீட்சை ஒன்றை நடாத்தி கலிவித் தகைமைகளுக்கமைய மேலான தகைமைகள் உடையோர் ஒழுங்குமுறையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.)

16.0 **பொய்யான தகவல்களை வழங்குதல்** :- இப் பரீட்சையில் தோற்றுவதற்காக ஏதேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு தகைமையில்லை என்பதை தெரியவருமாயின் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போதே அல்லது பரீடசைக்குப் பின்னர் எச்சந்தர்ப்பத்திலேனும் அவரின் பரீட்சார்த்தி உரிமையை இரத்துச் செய்வதற்கு தென் மாகாண அரசாங்க ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது. மேலும் , ஏதேனும் பரீட்சார்த்தி ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் ஒரு

தகவல், பொய்யானதென தெரிந்தே சமர்ப்பித்துள்ளாரென தெரியவருகையில் அவர் தொடர்பாக ஒழுக்காற்று ரீதியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

i. விண்ணப்பத்தை நிரப்பும் போது மிகவும் கவனமாக துல்லியமான தகவல்களை வழங்கல் வேண்டும். இப் பரீட்சைக்கு ஏற்புடைய விதிமுறைகளுக்கமைய எந்தவொரு பரீட்சார்த்தியும் அதற்கு தோற்றுவதற்கு தகாதவர்கள் என்று தெரிய வந்தால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போதே அல்லது பரீடசைக்குப் பின்னர் எச்சந்தர்ப்பத்திலேனும் அவரின் பரீட்சார்த்தி உரிமையை இரத்துச் செய்வதற்கு இவ் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது.

ii. பரீட்சார்த்தி ஒருவரால் வழங்கப்பட்ட தகவல்கள் பிழையானதென பிற்காலத்தில் தெரியவந்தால் அவரால் வேண்டுமென்றே ஏதேனும் ஒரு காரணத்தை மூடிமறைத்துள்ளாரென வெளிபடையானால் அவருக்கு நியமனத்தை வழங்குவது தொடர்பில் இனி மேலும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது. அத்துடன் இப் பரீட்சை காரணமாக்கிக்கொண்டு வழங்கியுள்ள நியமனத்தை இரத்து செய்ய அல்லது அரச சேவையில் இருந்து பணி நீக்கம் செய்யப்படவும் உட்படுவார்.

17.0 பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படுகின்ற சட்டத்திட்டங்களுக்கு பரீட்சை பரீட்சார்த்திகள் உட்படுவர். அச் சட்டத்திட்டங்களை மீறினால் தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படுகின்ற எந்தவொரு தண்டணைக்கும் உட்படுவதற்கு அவருக்கு நேரும்.

18.0 பரீட்சையை நடாத்துதல், பரீட்சையை இரத்துச்செய்தல் அல்லது பரீட்சைப் பெறுபேறுகளை இடைநிறுத்தல் மற்றும் அதற்கு இடைநேர் விளைவாக பரீட்சை அறிவிப்பில் ஏற்பாடுகள் செய்யப்படாத வேறு ஏதேனும் விடயத்தை தொடர்பாக தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் முடிவு இறுதி முடிவாகும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இவ் அறிவித்தலில் குறிப்பிட்ட பொது பரீட்சை சட்டத்திட்டங்களுக்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்ள கடமைப்பட்டுள்ளனர்.

19.0 இவ் அறிவித்தலில் குறிப்பிட்ட சிங்களம்,தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களுக்கிடையில் ஏதேனும் முறண்பாடு ஏற்பட்டால் , அப்போது சிங்கள மொழி வாசகமே மேலோங்குதல் வேண்டும்.

தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப் படி,

சீ.பீ.ராஜகருணா
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
தென் மாகாணம்

C.P. Rajakaruna
Secretary
Provincial Public Service Commission
Southern Province

2025 அக்டோபர் மாதம் 03ஆம் திகதி,
தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
06ஆம் மாடி,
மாவட்ட செயலக கட்டிடம்,
காலி.

( இவ் அறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நிறுவனங்களால் போலியாக தயாரித்து சமர்ப்பிக்கப்படும் அறிவித்தல்களில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு எவ்வித போறுப்பும் ஏற்றுக்கொள்ளாது)